செய்தி வெளியீடு எண்: 700 நாள்:16.10.2019

**செய்தி வெளியீடு**

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் வெளிநாட்டு வேலை வேண்டி பதிவு செய்து புதுப்பிக்க தவறியவர்களுக்கு உதவும் பொருட்டு இந்நிறுவனம் ஒரு புதியச்சலுகை அளிக்க முன்வந்துள்ளது. அதன்படி, 1.1.2015 முதல் 30.09.2019 வரை தங்களது பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்கள், இந்தச்சலுகையின் மூலம் தங்களுடைய பதிவினை **எந்தவித கட்டணமும் இல்லாமல்** புதுப்பித்துக்கொள்ளலாம்.

எனவே, பதிவை புதுப்பிக்க விரும்புவர்கள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்த தங்களின் பதிவு அட்டை, சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவம், கல்வி மற்றும் அனுபவச்சான்றிதழ், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் ஒரு புகைப்படத்துடன் உடனடியாக எண்.42, ஆலந்தூர் சாலை, ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகம், திரு. வி. க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை 600 032 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்புச்சலுகையினை 15.12.2019 வரை பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வலைதளம் www.omcmanpower.com மற்றும் 044-22505886/ 22500417 / 8220634389 என்ற தொலைபேசி எண்களின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**